1978 மார்ச் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை சிறிது நீட்டிகிறேன்.

விவசாயிகள் பிரச்சினை குறித்த ஆணைக் குழு.

*397. வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) : விவசாயிகள் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தறிய கமிஷன் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ): இம் மாநில உழவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்திட ஓர் ஆணைக் குழு (Commission) அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும் அரசு, அரசாங்க அலுவலகர்களும் அரசு அலுவலரல்லாதவர்களும் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும் அடங்கிய ஓர் குழுவை (Committee) அமைத்துள்ளது. இந்தக் குழு கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி ஆராயும்:—

1. விவசாய நீரேற்றும் குழாய்க்கான மின்கட்டணம்.
2. நெல் கொள்முதல் விலை.
3. கடன்களைத் திருப்பிக் கொடுப்பதில் காலம் அளித்தல்.
4. ஆக்க செலவுக்கேற்ப வேளாண்மை உற்பத்தி பொருட்களுக்கு குறைந்த அளவு விலை அறுதியிடல்.

இவற்றோடு இவை சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் இக்குழு ஆராயும்.

*398. வினா—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளின் குறைகளைப் பற்றி ஆராய மேல் மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்ட பிறகும், வரிகள், மின் கட்டணம், கடன்கள் முதலியவைகளைக் கட்டவேண்டாம் என்று போராட்டம் நடத்த விவசாய மக்கள் முடிவெடுத்திருப்பதால் வடாற்காடு மாவட்டத்தில் பதட்டமான நிலை உருவாகியிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்பற்றி அரசு என்ன முடிவெடுத்திருக்கிறது?